# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE OF CHENGALPATTU

| SESSIONS CASE No. | 289 | of | 2014 |
|---|---|---|---|

| Deposition of Witness for | Prosecution | PW | 7 | Defence | DW | | Court | CW | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | ராமசாமி | வயது | | இனம் | |
| தகப்பனார் /கணவர் பெயர் | | | | தொழில் | |
| கிராமம் /முகவரி | | | | மதம் | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the 26th day of March 2026

நாள் :- 26.03.2026 அ.சா. 7 (எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை**

நான் மதுராந்தகம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் கல்பாக்கத்தில் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 07.01.2013 அன்று சுஷ்மா என்பவர் கல்பாக்கம் அணுமின் நிலைய ஊழியராக இருந்தவர் நிலையம் ஆஜராகி எதிரி குமார் என்பவர் தன்னை அவதூறாக பேசி, கிண்டல் செய்து, முகத்தை பார்த்தால் முத்தம் தரவேண்டும் போல் தோன்றுகிறது என்று சொல்லி, தனக்கு இணங்கவில்லை என்றால் உன்னையும் உன் கணவரையும் டிரான்ஸ்பர் செய்துவிடுவேன் என்று சொல்லி புகார் கொடுத்தார். நான் அந்த புகாரை பெற்று சம்பவ இடம் சென்று பார்வையிட்டு உயர் அதிகாரிக்கு தகவல் தெரிவித்து அதன் பிறகு காவல் நிலையம் வந்து எதிரி மீதுஇ.த.ச,.

பிரிவகள் Sec.509, 506(1) மற்றும் Sec.4 of TNPHW Act ஆகியவற்றின் கீழ் முதல் தகவல் அ றிக்கை பதிவு செய்தேன். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4 ஆகும். அதன் பிறகு கோப்பை ஆய்வாளர் பார்வைக்கு மேல்நடவடிக்கைக்காக வைத்தேன்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

நான் சம்பவ இடத்தை பார்வையிட்ட போது கல்பாக்கம் அணுமின் நிலைய ஊழியர்கள் 4, 5 பேரை சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தேன். நான் 1 வருட காலமாக கல்பாக்கம் காவல் நிலையத்தில் பணிபுரிந்தேன். கல்பாக்கம் காவல் நிலைய எல்லைக்குள் தான் கல்பாக்கம் அணுமின்நிலையம், அனல்மின் நிலையம் ஆகிய மத்திய அரசு நிறுவனங்கள் வருகின்றன. அங்கு வேலை செய்பவர்களுக்கு செயல்படக்கூடிய சங்கம் உள்ளது. இந்தியாவில் பல்வேறு பகுதிகளை சேர்ந்தவர்கள் அதில் பணிபுரிந்து வருகிறார்கள். அவ்வாறு பணிபுரிபவர்களுக்கு முறையாக பதவி உயர்வு கொடுக்கவில்லை என்றால் அதிகாரிகள் மீது புகார் கொடுப்பார்கள் என்றால் சரிதான். அதே போல ஒரு ஊழியரை பணியிட மாற்றம் செய்யப்போகிறார்கள் என்று தெரிந்தால் அதை தடுக்க வேண்டு பொய் புகார் கொடுப்பதுண்டு என்றால் சரிதான். நான் சொல்வது போல 07.01.2013 அன்று புகார் அளிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. உயர் அதிகாரியை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு 28.01.2013

அன்று எனது துணைக்கொண்டு யூனியன்காரர்கள் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக பொய்யாக கொடுக்கப்பட்டு அதை நான் பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. நான் அதற்கு தகுந்தாற்போல பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :-**

இல்லை

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu